4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 212 /2017 நாள்: 23.04.2025 பி.வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அருள்ராஜ் | தொழில் | : ஆவண எழுத்தர் |
| த/பெ | : டேனியல் | கிராமம் | : உடுமலைபேட்டை |
| வயது | : 60 | தாலுகா | : உடுமலைபேட்டை |
| | | மாவட்டம் | : திருப்பூர் |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -

நான் உடுமலைபேட்டையில் ஆவண எழுத்தராக கதவு எண்.1, கச்சேரி வீதியில் தொழில் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஆவண எழுத்தர் ஜானகிராமன் என்னுடைய அலுவலகத்தில் 4 ஆண்டுகள் பணிபுரிந்தார். அவர் இறந்து சுமார் 15 வருடங்கள் இருக்கும். ஆவணங்கள் தயார் செய்யும் போது ஆவண எழுத்தர் கையொப்பமிட்டு முத்திரை வைப்பது வழக்கம் என்றால் சரிதான். ஜானகிராமன் கையெழுத்து எனக்கு பரிட்சயமானதாகும். பி.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள ஆவணம் தயாரித்தவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் ஜானகிராமனுடையது தானா என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள ஆவணம் தயார் செய்தவர் என்று கையொப்பமிட்டுள்ளது ஜானகிராமனுடைய கையொப்பமில்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–C.Rajalingom.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.